RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2512

# The Moral Teachings of Naladiyar in the Light of Jain Philosophies

**M. Thadsanamoorthi [a, *], G. Ramesh [a]**

[a] Department of Tamil, School of Social Science & Humanities, Central University of Tamilnadu, Tiruvarur-610005, Tamil Nadu, India

*Corresponding author Email: thadsanamoorthi001@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2512

Received: 30-11-2024; Revised: 08-01-2025; Accepted: 12-01-2025; Published: 23-01-2025

**Abstract:** After the Thirukkural, which is considered the leading text among the eighteen books, the Naladiyar has maintained its popularity. The proverb "Nalum udumum sollukkuruti" illustrates this truth. The contribution made by the Jain religion to the Tamil language is immeasurable. Jainism played a major role in the religious life of the ancient Tamils. The names Arugatha religion, Nikanda religion, Aakananda religion, and Liathvada religion are given to Jainism. The meaning of Jainism gives the meaning of monks. The Jains were experts in both the fields of grammar and literature in Tamil. The influence of Jainism can be seen here and there in the Sangha bhagas. The Purananutru song "Yadum Ure Yaavarum Kelir" and the song "Undalamma" are common to all religions, but they have absorbed Jain ideas. Jain literature can be divided into three types. The first type is the grammar written in a way that is suitable for learning the ancient grammar, the second type is the poetry and prose, which arose as an attempt to create poetry. The third type is the method of the Jains, based on their principles, shaping morality into a special way that is specific to the Jains and a way that is relevant to everyone. Among them, the Naladiyar, one of the eighteen books of literature from the period after the Sangha, contains most of the Jain ideas. The purpose of this article is to explain that the Naladiyar completely absorbs Jain philosophies and teaches them as virtues to be followed in life.

**Keywords:** Naladiyar, Jain ideas, Jain literature, Proverb, Jainism

# சமணத் தத்துவங்கள் நோக்கில் நாலடியாரின் அறக்கருத்துகள்

**மா. தட்சணாமூர்த்தி [அ *], க. இரமேஷ் [அ]**

[அ] தமிழ்த்துறை, சமூக அறிவியல் & மொழிகள் புலம் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்-610005 தமிழ்நாடு, இந்தியா

## முன்னுரை

சமண இலக்கியங்களை மூன்று வகையில் அடக்கலாம். முதலாவது தொல்காப்பிய இலக்கணத்தை கற்பவற்கு ஏற்ற வகையில் எழுதப்படும் இலக்கணம், இரண்டாம் வகை பாச்செய்யுளும் உரைச்செய்யுளுமாகா இயற்றப்படுவன இம்முயற்சியே காப்பியமாக எழுந்தன. மூன்றாம் வகை சமணர்கள் தங்களின் கொள்கையின் அடிப்படையில் அறத்தைச் சமணர்க்கே உரிய சிறப்பு வகையிலும் அனைவருக்கும் உரிய வகையிலும் அறநூல் பாட்டாக வடிவமைக்கும் முறையாகும். அவற்றுள் சங்கம் மருவிய கால இலக்கியங்களான பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான நாலடியார் பெரும்பான்மையான சமணக்கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு இலங்குகிறது. சமணத் தத்துவங்களை முழுவதும் உள்வாங்கி அவற்றை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய அறங்களாக நாலடியார் போதிக்கின்றன என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சமண சமய தத்துவங்கள்

சைன மதம் இந்திய வரலாற்றில் மிகுந்த புகழ் பெற்றது. இம்மதம் துறவை வற்புறுத்திக் கூறி, துறவு பூண்டவரே வீடு பெறுவர் என்று சாற்றுகிறது. எனவே துறவு எனப்பொருள் படும் "சமணம்" என்னும் பெயர் இந்த மதத்திற்குச் சிறப்புப் பெயராக அமைகிறது. *"புலன்களையும் கர்மங்களையும் வென்றவர் ஆகலான் தீர்த்தங்காரருக்கு ஜீனர் என்னும் பெயர் உண்டு. ஜீனரைக் கடவுளாகக் கொண்ட மதம் ஜைன மதம். சமண சமயக் கடவுளுக்கு அருக தேவன் என்னும் பெயரும் உண்டு. ஆகவே, அருகனை வணங்குவோர் ஆருகதர்"* (Appandairajan, 2023).

"உயிரும்உயி ரல்லது,புண்ணியம், பாவம், ஊற்றும்

செயிர் தீர்செறிப் பும், உதிர்ப்பும், கட்டும், வீடும், உற்ற

துயரதீர்க்கும் தூய நெறியும்சுருக்க காய்யுரைப்பன்

மயல்தீர்ந்த காட்சி யுடையோய் ! இது கேண்மிதித்தே"

என்ற மேருமந்திர புராணம் சமண சமயத்தின் தத்துவத்தை ஒன்பது பொருள்கள் கூறப்படுகின்றன (Alice, 2016). இவற்றை நவபதார்த்தம் என்பர். அவை : உயிர், உயிரல்லது, புண்ணியம், பாவம், ஊற்று, செறிப்பு, உதிர்ப்பு, கட்டு, வீடு என்பவனவாம். இவற்றின் முறையே ஜீவன், அஜீவன், புண்ணியம், பாவம், ஆஸ்ரமம், ஸம்வரை, நிரஜரை, பந்தம், மோட்சம் என்றும் கூறுவர். சமண மதங்கள மாவிரதங்களாகக் கூறுவன ஐந்து. அவையாவன அகிம்சை, வாய்மை, கள்ளாமை, துறவு, அவாவறுத்தல் ஆகும். இவை அனைத்தையும் சமண முனிவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகளாகும். இத்தகைய நெறிகளை கடைபிடித்து ஒழுகவேண்டிய நெறியாக நாலடியார் தம் பாடல்களில் மிகச்சிறப்பாக கொண்டுள்ளது. மேற்கண்ட சமண நெறிகளை நாலடியார் பாடல்களில் இழையோடியுள்ளமை நோக்கற்பாலது.

## சமணப் பார்வையில் அகிம்சையும் நாலடியாரின் அறக்கூறுகளும்

"அகிம்சா பரமோ தர்ம"என்பது சமணரின் அடிப்படையான தர்மம். இவற்றுள் இன்னா செய்யாமை, அருளுடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல் ஆகியன அடங்கும். இவ்வகையில் தீவினை அச்சம், அறன் வலியுறுத்தல் ஆகிய அதிகாரத்தில் நாலடியார் சமண சமயக் கருத்துக்களைப் போதிக்கிறது. மேலும் இன்னா செய்யாமையைத் தனி அதிகாரத்தில் விளக்குவது மட்டும் அல்லாமல் பல்வேறு இடங்களில் மீண்டும் மீண்டும் இன்னா செய்யாமையை விளக்கப்படுகிறது. எனவே சமண சமயம் காட்டும் அகிம்சை என்னும் விரதத்தை அறத்தினது வலிமையை உணர்த்துதல் என்ற இடத்தில் விளக்குகிறது. முற்பிறப்பில் ஒருவன் தவம் செய்யாதவனாயின் அவன் அதற்கு முற்பிறப்பிலும் தவம் மேற்கொள்ளாதவன். தீவினையில் உழன்றவன், அறிவில்லாதவன் முன் செய்த தீவினை இப்போது வந்து அவனை வாட்டும், இப்பிறப்பில் மீண்டும் வந்து துன்பம் தரும். அத்தீவினைப் பயனை நினைந்துப் பார்த்து, இது முற்பிறவியில் பாவத்தால் நேர்ந்தது என்றுணர்ந்து இப்பிறவியில் தீமை செய்யாது இருக்க வேண்டும் என்கிறது நாலடியார். இதனைக் கீழ்க்கண்ட பாடல் மூலம் விளக்குகிறது,

"அகத்தாரே வாழவாறேன் றண்ணாந்து நோக்கிப்

புகத்தாம் பெறாஅர் புறக்கடைபற்றி

மிகத்தாம் வருந்தி இருப்பரே மேலைத்

தவத்தால் தவஞ்செய்யா தார்"

கிடைத்தற்கு அரிய இம்மானுடப் பிறவியைப் பெற்றிருக்கிறோம் (Bala Sundaram Pillai, 1964). எனவே இப்பிறவியைப் புண்ணியப் பயனால் பெற்ற பிறவியை சரியாக பயன்படுத்தி மறுமையில் இன்பம் எய்த வேண்டும். பெற்றதைக் கொண்டு புண்ணியத்தை மிகுதியாகத் தேடிக் கொள்ள வேண்டும். அப்புண்ணியம் கரும்பிலிருந்து உண்டான சாறுபோல், உயிருக்குப் பெரிதும் உதவும்,

அக்கரும்பின் சக்கைப் போல உடம்பு பயணற்றுப் போகும் என்று நாலடியார் அறத்தை வற்புறுத்துகிறது.

"அரும்பெறாள் யாகாக்கையைப் பெற்ற பயத்தால்

பெரும்பயனும் ஆற்றவே கொள்க - கரும்பூர்ந்த

சாறுபோல் சாலவும் பின்உதவி மற்றதன்

கோதுபோல் போகும் உடம்பு" (Bala Sundaram Pillai, 1964)

இக்கருத்துக்களை நோக்கின் சமணத் தத்துவக்களம் வெளிப்படுத்தும் அறக்கொள்கைகள் நாலடியார் மூலம் வாழ்க்கையில் ஒழுக வேண்டிய ஒழுக்க நெறிகளாகப் போதிக்கப் படுகின்றன.

## சமணப் பார்வையில் நாலடியாரில் மெய்ம்மை

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்" என்கிறார் வள்ளுவர். சமண சமயத்தைப் பரப்புவதற்காக இயற்றப்பட்ட நிலகேசியில் ஒருவனைப் பாதுகாப்பேன் என்று உறுதி கூறி பின்னர் அது இயலாமை காரணம் பற்றி மறுத்தல் வஞ்சனையுடையது. மேலும் அவன் உயிரைக் காப்பாற்ற பொய் கூறுதல் சிறந்தது என்கிறது.

"பொய்சி தைத்தது என்சொல்லிப் பெயர்ந்துரை

பொய் உரைத்தலான் என்றால் பொருந்துமோ" (Appandairajan, 2023)

எனவே சமண மதம் பொய்மை கூடாது என்கிறது. ஆனால் ஓர் உயிரைக் காப்பாற்ற வேண்டிய சூழலில் பொய்மை சரி என்கிறது. அதாவது "பொய்யாமையவது, தீமை பயக்கும் சொற்களைக் கூறாமை" என்பது சமணராகிய இளம்பூரண அடிகளின் உரையால் அறியப் பெறுகிறோம். "நான் எப்பொழுதும் மெய்மையே பேசுவேன்; ஒரு போதும் பொய் பேசமாட்டேன்; பிறரைப் பொய் பேசத் தூண்டவும் மாட்டேன் மனம், மொழி, மெய்களால் முக்காலங்ககளில் மெய்மையே பேசுவேன்" என்று கூறுகிறார் ஆருகத முனிவர். மேற்கூறிய சமணத் தத்துவ நூல்களில் மெய்ம்மை வலியுறுத்தப்படும் மாற்றை அறியலாம்.

தன்னிடத்திலே ஒருவன் ஈதல் வேண்டி வருவானாயின் அவனுக்குத் தன்னால் ஆகியப் பொருளை இரந்து உதவ வேண்டும். அல்லது தன்னால் கொடுக்க முடியாத பொருளாயின் இல்லை என்று உரைத்தல் நன்று. அதுவன்றி தன்னிடம் இரப்பவனிடத்து தருகிறேன் என்று உரைத்து பலநாள் கழித்து இல்லை என்று உரைப்பது குற்றமாகும்.

"இசையா ஒருபொருள் இல்லென்றல் யார்க்கும்

வசையன்று வையத் தியற்கை - நசையழுங்க

நின்றொடிப் பொய்த்தல் நிரைதோடிஇ! செய்ந்நன்றி

கொன்றாரின் குற்றம் உடைத்து" (Alice, 2016)

சமணத் தத்துவ நூல்கள் அனைத்தும் மெய்ம்மையை விளக்கும் வகையுள் நாலடியாரும் விளக்குகிறது.

## சமண தத்துவ நோக்கில் நாலடியார் போற்றும் அவாவறுத்தல்

அவாவறுத்தல் என்பதாவது முற்றும் துறத்தலாகும். இதற்குச் சமணராகிய இளம்பூரணர் "துறத்தலாவது தன்னுடைய பொருளைப் பற்றற துறத்தல்" என்கிறார். மேலும் இதனை 'பரிக்கிரகத் தியாகம்' என்பர். திருவள்ளுவர் அவாவினை ஆசையைத் துறத்தல் என்ற கூற்றின்படி விளக்குகிறார்.

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே

பேரா இயற்கை தரும்” (Meenakshi Sundaranar, 2011)

எவ்வளவு கிடைத்தாலும் அடங்காத தன்மையுள்ளது ஆசை. அதை அடக்கிவிட்டால் அப்போதே பிறப்பில்லாத பேரின்ப நிலை வந்துவிடும் என்கிறார். “உயிருள்ள பொருளாயிருந்தாலும் உயிரற்றப் பொருளாயிருந்தாலும் சிறியதாயினும் பெரியதாயினும் எல்லாப் பொருள்களையும் துறந்து அவற்றின் தொடர்பை நீக்கிக் கொள்கிறேன். இதனை மனம், மொழி, மெய்களால் முக்காலத்திலும் செய்ய உறுதி கூறுகிறேன்” என்று கூறி இந்த மாவிரதத்தைச் சமண முனிவர் மேற்கொள்கின்றனர். இவ்வகை நெறி சமண நூலான சிந்தாமணியிலும், நீலகேசியிலும் விரிவாக பேசப்பட்டுள்ளது.

“கொறல் பொய்த்தல் கொடுங்களவு நீக்கிப் பிறர் மனைகள்மேல்

சேற லின்றிச் செழும்பொருண்மேல் சென்ற சிந்தை வேட்கையினை

ஆறுகிற்பின் மாருலகம் நுங்கட்ட கடிய தாமென்றான்

நீறும் ஓடும் நிழன்மணியும் பொன்னும் நிகரா நோக்குவான்” (Alice, 2016)

“உயிர்க்கொலை செய்தல், பொய் பேசுதல், கொடிய திருட்டை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை நீக்கி பிறர் மனைவியரை விரும்பிச் செல்லாமல் இருத்தல், பெரும் பொருள்மேல் ஏற்படும் ஆசையை அடக்குவீராயின் வானவர் உலகம் எளிதில் வசப்படும் என்று சமண நூலான நீலகேசி குறிப்பிடுகிறது. இவ்வகை ஒழுக்க நெறிகளைச் சீவக சிந்தாமணியும் குறிப்பிடுகிறது. அப்பாடல் பின்வருமாறு,

“ஐவகைப் பொறியும் வாட்டி, ஆமையின் அடங்கி ஐந்தின்

மெய்வகை தெரியுஞ் சிந்தை விளக்கும் நின் றெரிய விட்டுப்

பொய் கொலை களவு காமம் அவா இருள் புகாது போற்றிச்

செய்தவம் நுனித்த சீலக் கனைகதிர்த் திங்கள் ஒப்பார்” (Alice, 2016)

இவ்வகை துறவு நெறி நாலடியாரில் போற்றப்பட்டுள்ள இனி விளக்கப்படுகிறது, செல்வம் முதலான புறப்பற்றையும், உள்ளத்தில் எழும் ஆசைகளையும் அடக்குவது குறித்து நாலடியார் துறவு என்ற அதிகாரத்தில் குறிப்பிட்டடுள்ளது. பிறர் தம்மைப் பழித்துப் பேசுவதைப் பொறுத்துக் கொள்வதல்லாமல் “இவர்கள் தம்மை இகழ்ந்த தீவினைப் பயனால் மறுமையில் எரியும் நரகத்தில் வீழ்வர் என்று இரங்குவதே துறவிகளின் கடமை என்கிறது நாலடியார்.

“தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்று

எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால் - உம்மை

எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று

பரிவதூஉம் சான்றோர் கடன்” (Alice, 2016)

மேலும் மெய், வாய், கண், மூக்கு, செவி எனப் பெயர் பெற்ற ஐந்து புலன்களை அடக்கி, அவற்றின் வழியாக வரும் மிகுந்த ஆசையினை அடக்குவானாயின் அவனே வீடுபேறு அடையும் தன்மை பெறுவான் என்கிறது நாலடியார்.

“மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற

ஐவாய வேட்கை அவாவினைக் கைவாய்

கலங்காமற் கத்துயக்கும் ஆற்ற லுடையான்

விலங்காது வீடு பெறும். (Bala Sundaram Pillai, 1964)

## முடிவுரை

சமணத்தத்துவங்களின் அறக் கோட்பாடுகளின் மையச்சரடாக நாலடியார் விளங்குகிறது, மேலும் அக்கோட்பாடுகள் விளக்கும் வாழ்வியல் விழுமியங்களாக கட்டமைக்கப்பட்டதை அறிய முடிகிறது. சமணர்களின் மாவிரதங்களான அகிம்சை, வாய்மை, கள்ளாமை, துறவு, அவாவறுத்தல் முதலான ஒழுகலாறுகளும் சமிதிகளான இரியை, பாஷை, ஏஷனை, ஆதான நிகோஷபனை, உத்சர்க்கம் முதலான கூறுகளையும் நாலடியாரில் காண முடிகிறது.

## References


Alice, A. (2016) Pathinen Kelkanaku Porulkalanjiyam: Naladiyar, Tamil University, Thanjavur, India

Appandairajan, J. (2023) Nilakesi, Varthamanan Pathippagam, Chennai, India

Bala Sundaram Pillai, S. (1964) Naladiyar Moolam Polipuraiym, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Tirunelveli, India

Meenakshi Sundaranar, T.P., (2011) Jain Tamil Literature History, Pari Nilayam, Chennai, India

Sinivenkadasami, M. (2019) Jainism and Tamil, Alaikal Veliyitagam, Chennai, India


### Conflict of interest

The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

### About the License

© The Author(s) 2025. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

M. Thadsanamoorthi, G. Ramesh, The Moral Teachings of Naladiyar in the Light of Jain Philosophies, Indian Journal of Tamil, 6(1), (2024) 7-11. https://doi.org/10.54392/ijot2512